# 7

# கிறிஸ்துவின் வாழ்வின் இசைவைக் கற்றுக்கொள்ளுதல்

*மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியோரின் சுவிசேஷ விவகரங்களைப் படிப்பதன்மூலம் நாம் நமது பாடத்தை தொடங்குவோம். நீங்கள் காணப்போகின்றபடி, இந்தப் புத்தகத்தில் படிக்கப்போகின்ற இசைவின் ஒரு பகுதி முதலாவது கொடுக்கப்பட்டிருக்கிறது. புத்தகத்தின் மீதி பகுதியில், படிப்பதற்காகக் கொடுக்கப்பட்ட வசனம் சம்பந்தப்பட்ட ஒரு பாடமானது, அதே பாடத்திலிருந்து, வசனப்பகுதிக்கு சம்பந்தப்பட்ட இன்னொரு பாடத்துடன் மாறிமாறிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இசைவின் ஒவ்வொரு பகுதியையும் பிரசங்கரீதியாக வழங்க ஒரு முயற்சி செய்யப்பட்டுள்ளது. நமக்கு இதில் இரண்டு நோக்கங்கள் உள்ளன: (1) ஒவ்வொரு பாடத்தையும் எவ்வளவு ஆர்வமுள்ளதாக்க முடியுமோ அவ்வளவு ஆர்வமுள்ளதாக்க ஒரு முயற்சி செய்தலும் (2) அதிகமான வசனப் பகுதிகள் எவ்வாறு விரைவில் கண்ணோட்டமிடுவது என்பதை விலக்கப்படுத்துலுமே. கிறிஸ்துவின் வாழ்வின் தொடர்பாடங்கள் முழுவதுமே இதே வழிமுறையில் தொடர்கின்றன.*

*மிகவும் ஆர்வமிக்க பாடத்தொடர் வரப்போகின்றன. கிறிஸ்துவின் வாழ்வைப் பற்றிப் படிக்க நாம் கூடுதலான சமயம் எடுத்துக் கொள்ளப் போகிறோம். நாம் அவருடைய “அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி” நமக்கு அவர் “ஒருமுன்மாதிரியைப்” பின்வைத்துப் போயிருக்கிறார் (1 பேது. 2:21), நாமும் நமது எஜமானின் அடிச்சுவடுகளை அதிகமாகப் பின்பற்றிச் செல்வோம்.*

# ஒப்பீடு

I. *அவரது ஊழியத்திற்கு முன்னதாகக் கிறிஸ்துவின் வாழ்வு.*
   A. *லூக்காவின் முன்னுரை மற்றும் அர்ப்பணிப்பு (லூக். 1:1-4).*
   B. *யோவானின் அறிமுகம் (யோவா. 1:1-18).*
   C. *மத்தேயு கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (மத். 1:1-17).*
   D. *லூக்கா கூறுகின்றபடி இயேசுவின் வம்ச வரலாறு (லூக். 3:23-38).*
   E. *யோவான் ஸ்நானன் பிறப்பு பற்றி சகரியாவுக்கு தூதனின் அறிவிப்பு (லூக். 1:5-25).*
   F. *இயேசுவின் பிறப்பு பற்றி மரியாளுக்குத் தூதனின் அறிவிப்பு (லூக். 1:26-38).*
   G. *(கர்ப்பவதியாயிருந்த இயேசுவின் தாயார்) மரியாள், (கர்ப்பவதியா யிருந்த யோவான் ஸ்நானனின் தாயார்) எலிசபெத்தைச் சந்தித்தல் (லூக். 1:39-56).*
   H. *யோவான் ஸ்நானனின் பிறப்பும், அவரது தொடக்க கால வாழ்வும் (லூக். 1:57-80).*
   I. *இயேசுவின் வருகை பற்றி யோசேப்புக்கு அறிவிப்பு (மத். 1:18-25).*
   J. *இயேசுவின் பிறப்பு (லூக். 2:1-7).*
   K. *இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படுதல் (லூக். 2:8-20).*
   L. *இயேசுவுக்கு விருத்தசேதனம் மற்றும் பெயரிடுதல்; தேவாலய ஆராதனை (லூக். 2:21-39).*
   M. *கிழக்கிலிருந்து ஞானிகளால் இயேசு சந்திக்கப்படுதல் (மத். 2:1-12).*
   N. *எகிப்துக்கு ஓடிப்போகுதலும் பெத்லகேமில் ஆண் குழந்தைகள் கொல்லப்படுதலும் (மத். 2:13-18).*
   O. *குழந்தை இயேசு எகிப்தில் இருந்து நாசரேத்தூருக்குக் கொண்டு வரப்படுதல் (மத். 2:19-23; லூக். 2:39ஆ வைக் காணவும்).*
   P. *இயேசு நாசரேத்தூரில் வாழ்தல்; அவரது பன்னிரெண்டு வயதில் எருசலேமுக்கு ஒரு பயணம் (லூக். 2:40-52).*

II. *யோவான் ஸ்நானனின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோவானின் ஊழியம் (மத். 3:1-6; மாற். 1:1-6; லூக். 3:1-6).*
   B. *யோவானின் செய்தி (மத். 3:7-12; மாற். 1:7, 8; லூக். 3:7-18).*

III. *இயேசுவின் ஊழியம் ஆரம்பித்தல்.*
   A. *யோர்தான் நதியில் யோவானிடம் இயேசு ஞானஸ்நானம்*

*பெறுதல் (மத். 3:13-17; மாற். 1:9-11; லூக். 3:21, 22; யோவா. 1:31-34).*

B. *வனாந்தரத்தில் இயேசு சோதிக்கப் படுதல் (மத். 4:1-11; மாற். 1:12, 13; லூக். 4:1-13).*

C. *இயேசுவைப் பற்றி யோவானின் சாட்சியம் (யோவா. 1:19-34).*

D. *(யூதேயாவில்) இயேசுவின் முதல் சீஷர்கள் (யோவா. 1:35-51).*

E. *(கலிலேயாவின் கானாவூரில்) இயேசுவின் முதல் அற்புதம் (யோவா. 2:1-11).*

F. *(கலிலேயாவின்) கப்பர்நகூமில் இயேசு முதலில் தங்குதல் (யோவா. 2:12).*

IV. *முதல் பஸ்காவில் இருந்து இரண்டாம் பஸ்கா வரை.*

A. *இயேசுவின் ஊழிய காலத்தில் வந்த முதல் பஸ்கா.*

1. *தேவாலயத்தைச் சுத்திகரித்தல் (யோவா. 2:13-25).*
2. *நிக்கொதேமுவுக்குப் போதித்தல் (யோவா. 3:1-21).*

B. *யூதேயாவில் முதல் ஊழியம் (மற்றும் யோவானாலும் மேலும் சாட்சி கொடுக்கப்படுதல்) (யோவா. 3:22-36).*